IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| RCS. No. | **297/2024** |
| Name | ஜோதிமணி |
| Husband’s Name | கமலக்கண்ணன் |
| Village | கோயம்புத்தூர் |
| Taluk | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 10.03.2026.

**நான் இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் ஆவேன். நான் தறி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். எனக்கு கமலக்கண்ணன் என்பவருடன் திருமணமாகி 1 மகன் மற்றும் மகள் உள்ளார்கள். என் கணவர் கடன் அதிகமாக வாங்கியதால் அதை திருப்பி கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்தார். 2 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் இருந்த எண் கணவர் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். தகவல் தெரிந்து நான் சென்று ஆம்புலன்ஸ் மூலம் Gem CH மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு என் கணவர் இறந்து விட்டதாக கூறினார்கள். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். என் கணவர் இறப்பில் சந்தேகம் இல்லை. போலீசார் தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை. வழக்கு முடித்துக் கொள்ள ஆட்சேபணை இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| RCS. No. | **558/2025** |
| Name | பரமசிவம் (pw2) |
| Father’s Name | முருகன் |
| Village | |
| Taluk | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 10.03.2026.

**நான் தள்ளுவண்டி கடை வைத்து நடத்தி வருகிறேன். 24.02.2023 ம் தேதி வேலை தேடுவதற்காக வீட்டில் யாரிடமும் சொல்லாமல் சென்றிருந்தேன். என்னை காணவில்லை என நினைத்து காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்திருந்தார். 3 நாட்கள் கழித்து திரும்பி வந்து விட்டேன். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். போலீசார் தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை. வழக்கு முடித்துக் கொள்ள ஆட்சேபணை இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.